FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education Northern Province**
**6th Term Examination, - 2020**

| | | | | |
|---|---|---|---|---|
| **தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் - I**<br>**Communication & Media Studies - I** | **Two Hours**<br>**Gr. 13 (2020)** | **29** | **T** | **I** |

**வினாத்தாள் கட்டமைப்பு**

**வினாத்தாள் 1 நேரம் : 02 மணித்தியாலங்கள்**

இவ்வினாத்தாள் A, B, C என்ற மூன்று (03) பகுதிகளைக் கொண்டது.

பகுதி A - (புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களுக்கானது)
இந்தப் பகுதி 5 தெரிவுகளைக் கொண்ட 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. அவை 2008 (பழைய) மற்றும் 2018 (புதிய பாடத்திட்டங்களுக்குப் பொதுவான பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும் **எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.** ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 25 புள்ளிகள் வழங்கப்படும்.

B, C ஆகிய பகுதிகளுள் **ஒரு பகுதியை மாத்திரம்** தெரிவு செய்து **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பகுதி B- பழைய பாடத் திட்டத்திற்கானது)
இந்தப் பகுதி 2008 **(பழைய)** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட 5 தெரிவுகளைக் கொண்ட 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 25 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி B- புதிய பாடத் திட்டத்திற்கானது)
இந்தப் பகுதி 2018 **(புதிய)** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட 5 தெரிவுகளைக் கொண்ட 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 25 புள்ளிகள் வழங்கப்படும்.

வினாத்தாள் I இற்கான மொத்தப் புள்ளிகள்

| | | |
|---|---|---|
| பகுதி A- | 1 x 25 = | 25 புள்ளிகள் |
| பகுதி B/C- | 1 x 25 = | 25புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | | 50 புள்ளிகள் |

agaram.lk

## பகுதி I

01 அனுப்புநர் பெறுநர் ஒத்த இயல்புகளை ஐந்து அம்சங்களின் அடிப்படையில் விவரிக்கும் தொடர்பியல் அறிஞர்

1) ஹரோல் டி.லாஸ்வெல் 2) அரிஸ்ரோட்டில் 3) வில்பர் ஷ்ராம்
4) டேவிட்.கே.பெர்லோ 5) ஷனோன் வீவர்

02. பின்வரும் நாட்டாரியல் அம்சங்களுள் குறித்தவோர் விடயத்தினை ஒப்பீட்டு விளக்குவதற்கு மிகப் பொருத்தமான வகை

1) பழமொழிகள் 2) விடுகதைகள் 3) உவமைகள்
4) இணைமொழிகள் 5) கவிதைகள்

03. ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம் அவர்களினால் முன்வைக்கப்பட்ட விளக்கத்தில் பொருந்தாத தன்மை கொண்ட கூற்று

1) இருவழிச் செயன்முறையுடன் தொடர்புடையது.
2) பின்னூட்டல் செயன்முறையை ஆதரிக்கின்றது.
3) நான்கு மூலதத்துவங்களினை அடிப்படையாகக் கொண்டது.
4) குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பில் விளக்குவது
5) சம நேரத்தில் பின்னூட்டலினை வெளிப்படுத்தியிருப்பது.

04. தகவல் மூலத்தினைச் சரியாக இனங்காண முடியாத தொடர்பாடல் வடிவம்

1) வாய்மொழித் தொடர்பாடல் 2) அளிக்கைத் தொடர்பாடல்
3) முறைசார் தொடர்பாடல் 4) முறைசாரா தொடர்பாடல்
5) வாய்மொழிசாராத் தொடர்பாடல்

05. அன்றாட வாழ்வில் ஒரு தனிநபரின் கொந்நிலை நடத்தைக் கோலம் என்பன இணைவதனால் உருவாகும் தொடர்பாடல்

1) செவிப்புலத் தொடர்பாடல் 2) அளிக்கைத் தொடர்பாடல்
3) வாய்மொழித் தொடர்பாடல் 4) வாய்மொழி சாராத் தொடர்பாடல்
5) எழுத்து தொடர்பாடல்

agaram.lk

06. மோசமான தொடர்பாடுநர் ஒருவரின் பண்பாகக் கொள்ள முடியாதது

1) திட்டமின்றி விடயங்களினை நுகருதல்
2) பயனற்ற செய்திகள் மீது நாட்டம் கொள்ளுதல்.
3) நோக்கின்றிய தொடர்பினை முன்னெடுப்பவர்.
4) வினாக்களைக் கேட்டுத் தெளிவுறல்
5) தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு தொடர்பாடுதல்

07. அண்மையில் ஏற்பட்ட சர்வதேச நோய்பரவல் தொடர்பான விடயங்கள் குடிமக்கள் அனைவராலும் பேசுபொருளாகியது. இவ்வாறான செயற்பாட்டிற்கு வலுச்சேர்த்த ஊடக வழிமுறை

1) பத்திரிகை 2) வானொலி 3) தொலைக்காட்சி
4) சினிமா 5) புதிய ஊடகம்

08. ஊடக விளங்கறிவு மூலமாக அடிப்படையில் விருத்தி செய்ய முயற்சிக்கப்படுவது யாது?

1) செய்தி விமர்சனத்திறன் 2) செய்தி உருவாக்கும் திறன்
3) செய்திகளை மதிப்பீடு செய்யும் திறன் 4) செய்திகளை உள்வாங்கும் திறன்
5) செய்திகளை பொருட்கோடல் செய்யும் திறன்

09. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய தொடர்பாடல் வகையைக் குறிப்பது

- தொடர்பாடப்படும் விடயம் தொடர்பான முன்னாயத்தம்
- பல்வேறு தொடர்பாடல் கருவிகள் பயன்படுத்த முடிதல்.
- கலங்கரை விளக்க உபாய முறை பயன்படுத்தல்.
- தலைமைத்துவப் பாங்கு முக்கியமாதல்.

1) ஆளுள் தொடர்பாடல் 2) குழுத் தொடர்பாடல்
3) ஆட்களிடைத் தொடர்பாடல் 4) வெகுசனத் தொடர்பாடல்
5) பொதுசனத் தொடர்பாடல்

10. ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு ஒன்றின் நன்மதிப்பு அல்லது நல்ல அபிப்பிராயம் ஒன்றினை உருவாக்கிக் கொள்ளும் செயற்பாடு
1) விளம்பரம் 2) விற்பனை 3) சந்தைப்படுத்தல்
4) பொதுசனத் தொடர்பு 5) மேம்படுத்தல்.

11. இலங்கையின் வெகுசன ஊடக வரலாற்றில் இலங்கை வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியாவது
1) சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலம் 2) ஒல்லாந்தருடைய காலம்
3) நவகாலனித்துவ காலம் 4) ஆங்கிலேயருடைய காலம்
5) மன்னராட்சிக் காலம்

12. குறித்த ஒரு சமூகத்தில் இனவர்க்க வேறுபாட்டினை அதிகமாக நலிவடைவதனை ஊக்குவிக்கும் பண்பாட்டு போக்கு
1) நாட்டாரியல் பண்பாடு 2) செம்மைப் பண்பாடு 3) பாரம்பரிய பண்பாடு
4) வெகுசன ஊடகப் பண்பாடு 5) இனப் பண்பாடு

13. வெகுசன ஊடகங்களின் பணிகள் தொடர்பில் ஆராய்கின்ற போது பாதுகாவலர் ஒருவருடைய வகிபாகம் கலந்துரையாடல் சபையின் வகிபாகம், ஆசிரியர் ஒருவரின் வகிபாகம் ஆகியன தொடர்பில் குறிப்பிடுபவர்
1) ஹரோல்.டி.லாஸ்வெல் 2) வில்பர் ஷ்ராம் 3) டானியல் லேனர்
4) லூசியன் பை 5) மார்ஷல் மக்லுஹான்

14. பொதுமக்கள் தொடர்பு நிறுவனம் ஒன்றின் வேலைத்திட்டங்கள் பொது மக்களிற்கு தெளிவு படுத்துவதற்கும் அதன் வாயிலாக நிறுவன நன்மதிப்பு உயர்த்துவதற்கும் ஏதுவான வெளியகப் பொதுசனத் தொடர்பினை மாத்திரம் கொண்ட தொகுதி
1) ஊழியர் ஒன்றுகூடல், அனுசரணை, விளம்பரம், கண்காட்சி
2) பத்திரிகைப் புகைப்படம், கண்காட்சி, அனுசரணை, செய்திமடல்.
3) அறிவிப்புப் பலகை, நலன்புரி அமைப்புக்கள், சுற்றுலாக்கள், கண்காட்சி
4) அனுசரணை, அறிவிப்புப் பலகை, கண்காட்சி, விளம்பரம்
5) செய்தி மடல், நேரடித் தொலைபேசி இலக்கம், அனுசரணை, சுற்றுலாக்கள்

agaram.lk

15. ஊடக விளங்கறிவு என்பது ஊடகத்தினால் சகல விதங்களிலும் முன்வைக்கப்படும் செய்திகளை நுகர்வதற்கு பகுத்தறிவதற்கு மதிப்பிடுவதற்கு மற்றும் நிர்மாணிப்பதற்கு பெற்றுக் கொள்ளப்படும் ஆற்றல் என வரைவிலக்கணப்படுத்துபவர்
1) யுனஸ்கோ அமைப்பு 2) மலாமோ பல்கலைக்கழகம்
3) ஐரோப்பிய ஆணைக்குழு 4) பிலிப்பைன்ஸ் அரச பல்கலைக்கழகம்
5) பெல்சில்வேனியாப் பல்கலைக்கழகம்

16. தற்போதைய ஊடகப் பண்பாட்டியலில் மிக முக்கியமாக விருத்தியடைந்திருக்கும் இணைந்த ஊடகவியல் போக்கிற்குப் பிரதான காரணமாவது
1) இணையத்தின் பரவலாக்கம்
2) ஊடக அலைவரிசைகளின் பெருக்கம்
2) தொடர்பாடல் காட்சி வழிப்போக்கின் அதிகரிப்பு
4) பூகோளமயமாக்கலின் அதிகரிப்பு
5) தகவல் பெறுவதில் செல்லிடத் தொலைபேசிகளின் பங்கு அதிகரிப்பு

17. ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவையை பிரதிபலிக்காதது
1) ஊடக உள்ளடக்க இயல்பையும் நிகழ்ச்சி நிரலினையும் வெளிக்காட்டாது.
2) புலனுணர்வு உயர் மட்டத்தில் வைத்துக் கொள்ளுதல்.
3) ஊடகத்தின் சமூக வகிபங்கு கலாசார தாக்கம் பற்றிய போக்குகளை அறியச் செய்தல்.
4) மக்களை மந்த நிலையிலிருந்து செயற்படு நிலைக்குக் கொண்டு செல்லுதல்.
5) படைப்பாளிகள் தமது ஆக்கங்கள் தொடர்பில் பூரண அறிவினைப் பெறுதல்.

18. வானொலி ஊடக மொழிப்பாவனையின் ஒரு பலவீனமாக கொள்ளத்தக்கது.
1) மீளமீள அதனைச் செவிமடுக்க இயலும்
2) எளிமையான மொழிநடை பயன்படுத்தப்படும்.
3) சுருக்கமான வாக்கிய அமைப்பு காணப்படும்.
4) பேசுதலும் கேட்டலும் சமநேரத்தில் நிகழும்.
5) கற்பனைத்திறன் மிக்க மொழிநடை பயன்படுத்தப்படும்.


19. வெகுசன ஊடக கருத்தாக்கத்தின்படி புலமைசார் சொத்துடமைச் சட்டம் மற்றும் இலங்கை பத்திரிகை சபைச் சட்டம் ஆகியன தொடர்புபடும் எண்ணக்கருவின் கருத்தாக்கங்களினை முன்வைத்தோர்
1) ஜோன் மில்ரன் தோமஸ்ஜெகர்சர்
2) வில்பர் ஷ்ராம், டெக்கார்டே
3) ஏஞ்சல் மாக்கியவல்லி
4) வில்பர் ஷ்ராம், ஜோசப் கோயபல்ஸ்
5) வில்பர் ஷ்ராம், வில்லியம் ரிவர்ஸ்

20. பாரம்பரிய அறிவுத் தொகுதியை நினைவுபடுத்துவதற்காகவும் பரவலாகப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் முற்கால அறிஞர்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட வழிமுறை
1) படைப்பாக்க ரீதியிலானள வெளியீடுகளாக மாற்றுதல்.
2) மனச்சித்திரங்களாக உருவகித்துக் கொள்ளுதல்.
3) சாராம்சப்படுத்தி நினைவில் வைத்துக் கொள்ளுதல்.
4) அத்தியாயங்களாக்கி நூல்களை உருவாக்குவதல்.
5) தர்க்க வடிவமைப்பு ரீதியில் ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல்.

21. செய்திப் பத்திரிகையொன்றின் பதிப்பாசிரியருக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதியொன்றில் எழுத்துப் பிழைகளும் இலக்கணத் தவறுகளும் கொண்ட சில வாக்கியங்கள் காணப்பட்டன. அதில் காணப்பட்ட சரியான வாக்கியம் எது?
1) பட்டமளிப்பு விழாவில் அவை பங்குபற்றியிருந்தன.
2) அவர்கள் பாடசாலையை நெருங்கியிருக்க காணப்பட்டது.
3) எதிர்த்தரப்பினரின் குற்றச்சாட்டை நிராகரித்தார் அமைச்சர்.
4) எந்தவொரு மனிதர்களும் அங்கு காணப்படவில்லை.
5) பாராளுமன்றத் தேர்தல் ஆவணிமாதம் நடைபெறும்.

agaram.lk

**22 – 25 வரையான வினாக்களிற்குக் கீழ்வரும் மாதிரியை அடிப்படையாக்க கொண்டு விடையைத் தெரிவு செய்க.**




22. மேற்குறித்த மாதிரி உருவின்படி குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்புச் சந்தர்ப்பத்தினைச் சுட்டி நிற்பது
1) A மற்றும் H
2) B மற்றும் D
3) C மற்றும் F
4) D மற்றும் G
5) B மற்றும் I

23. கொரோனா இடர் பற்றிய செய்தி ஒன்று மேற்குறித்த வழிமுறையில் கடத்தப்பட்டது எனினும் F இனால் அதனைச் சரிவர விளங்கிக் கொள்ள முடியாமலிருந்தது. இச்சூழலை அடையாளப்படுத்தும் ஆங்கிலப் பதம்
1) A என
2) B என
3) C என
4) H என
5) I என

24. மேற்குறித்த மாதிரி உரு தொலைபேசிக் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டது. இங்கு தகவலைக் கடத்தும் பகுதியைச் சுட்டி நிற்பது

1) A ஆகும். 2) **A** ஆகும். 3) C ஆகும்.
4) F ஆகும். 5) H ஆகும்.

25. மேற்குறித்த மாதிரி உருவில் பின்னூட்டம் உள்ளீர்க்கப்படுமாயின் அங்கு தகவல் பயணிப்பதளைப் புலப்படுத்திக் காட்டுவது

1) A யிலிருந்து H இற்கு 2) C யிலிருந்து H இற்கு 3) A யிலிருந்து I இற்கு
4) F யிலிருந்து C இற்கு 5) H யிலிருந்து A இற்கு

## பகுதி B

26. கீழே தரப்பட்ட பதங்கள் வழியாக வெளிப்படுத்தப்படும் மொழி வகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்கை குறிப்பிடுவது

A- நிறுத்தற்குறிகள், மொழிநடை, பொருத்தமான மரபுகள்

B – தனிப்பட்ட பார்வை நோக்கின் தேவை, கருத்தியல்

C- சந்தம், வேகம் மற்றும் மொழிநடையின் விசேடத்துவங்கள்

1) எழுதுதல், நடித்தல், பேசுதல் 2) பேசுதல், மீளாய்வு செய்தல், எழுதுதல்.
3) எழுதுதல், மீளாய்வு செய்தல், பேசுதல். 4) நடித்தல், பேசுதல், எழுதுதல்.
5) மீளாய்வு செய்தல், எழுதுதல், நடித்தல்.

27. மக்கள் தமது தேவைகளினைப் பூர்த்தி செய்ய முடியாதவிடத்து முரண்பாடுகள் தோன்றுகின்றன. மாஸ்லோ குறிப்பிடும் தேவைமட்டத்தில் ஆரம்ப நிலைத் தேவையுடன் தொடர்புடையது?

1) நடைமுறைத் தேவைகள் 2) சமூகம் வரவேற்கும் தேவை 3)சுயதேவை
4) உடலியற் தேவை 5) பாதுகாப்புத் தேவை.

agaram.lk

28. பின்வரும் அபிவிருத்தி தொடர்பாடல் பாவனைகளில் மகாத்மா காந்தியடிகளினால் பயன்படுத்தப்பட்ட அபிவிருத்தி தொடர்பாடல் அம்சங்களுடன் பொருந்தாத அம்சத்தைக் குறிப்பது

1) உப்புச் சத்தியாக்கிரகம், சுயராஜ்ஜியம் 2) அறியும் ஆற்றல், சாராம்சப்படுத்தல்.
3) சராம்சப்படுத்துதல், கைராட்டினம் 4) சுயராஜ்ஜியம், தொகுப்பாக்குதல்.
5) உப்புச் சத்தியாக்கிரகம், அறியும் ஆற்றல்

29. சர்வதேச ரீதியில் கலாசார வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பை வழங்கி விஞ்ஞானத் தளத்தில் இருந்து திட்டங்களினை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக அமைவது

1) சர்வதேச மன்னிப்புச் சபை 2) சர்வதேச நாணய நிதியம்
3) உலக வங்கி 4) உலக சுகாதார நிறுவனம்
5) யுனஸ்கோ

30. சுயஎண்ணக்கரு பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A- ஒரு நபரின் பிறப்புடனேயே உருவாகின்றது.

B- மற்றர்களுடன் கலந்துரையாடலின் விளைவாக உருவாகின்றது.

C- தொடர்பாடல் செயன்முறையின் வாயிலாக வளர்ச்சியடைகின்றது.

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானது / சரியானவை

1) A மாத்திரம் 2) B மாத்திரம் 3) C மாத்திரம்
4) A, C மாத்திரம் 5) B, C ஆகியன மாத்திரம்

31. வெகுசன ஊடகங்களில் சமூகப் பொறுப்புணர்வுக் கோட்பாடு பற்றிய கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.
மதுஷி - ஊடகச் செயன்முறையில் அரசின் தலையீட்டை இழிவளவாக்குகின்றது.
விதுஷி - பல்வேறு பிரதிநிதித்துவங்களிற்கான வெளியை வழங்குகின்றது.
கௌசி - தேவைப்படும் போது அரசின் விதிமுறைகளினை எதிர்பார்க்கின்றது.
கதீஷி - இலாபமீட்டும் குறிக்கோள் மற்றும் போட்டித்தன்மையை இழிவளவாக்குகிறது.
மேற்குறித்த கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றுக்களை முன்வைத்தோர்.
1) மதுஷி மற்றும் விதுஷி
2) மதுஷி மற்றும் கௌசி
3) மதுஷி விதுஷி மற்றும் கௌசி
4) விதுஷி, கௌசி, கதீஷி
5) மதுஷி, விதுஷி, கௌசி, கதீஷி

32. மாற்றூடகம் தொடர்பான கூற்றுக்களில் பொருத்தமில்லாதது
1) ஆதாய நோக்கினை அடிப்படையாக கொண்டது.
2) சிறிய குழுக்களிடையே தகவல் பரிமாறும் தன்மை கொண்டது.
3) பிரதான ஊடக நீரோட்டத்திற்கு வெளியாக தொழிற்படும்.
4) சமுதாய நலன் கருதி தொழிற்படும்.
5) பரந்த சமுதாயத்திற்கு தகவல் கடத்தப்பட முடியாதது

33. அபிவிருத்தி திட்டங்களினை தயார்ப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஐந்து குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A- திட்டத்தின் கால அளவு
B - திட்டத்தின் மதிப்பீடு
C - திட்டப்பகுதியின் புவிசார் காரணிகள்
D- திட்டம் இலக்கு வைக்கப்படும்சமூகம்
E – திட்டம் தொடர்பான வரவு செலவு
மேற்குறித்த குறிப்புக்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் வரிசைக்கிரமமாக அமைவது
1) A, B, C, D, E
2) A, D, C, E, B
3) B, A, C, D, E,
4) C, D, B, E, A
5) D, C, E,A, B

34. “கொரோனா இடர்காலத்தில் சமூக ஊடகத்தைப் பயன்படுத்துதல் என்னும் தலைப்பில் தொடர்பாடல் அய்வு அறிக்கை ஒன்றினை தயாரிக்குமாறு தங்களிற்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் உள்ளடக்கத் தேவையற்றது எது?
1) ஆராய்ச்சி முறையின் பயன்பாடு
2) பயன்படுத்திய மாதிரி எடுத்தல் முறை
3) ஆலோசனைகளும் முடிவுகளும்
4) தகவல் அபிவிருத்தித் திட்டங்களின் பாகுபாடு
5) பயன்படுத்திய பௌதீக மனித வளங்கள்

agaram.lk

35. உளப்பகுப்பாய்வு கோட்பாட்டினை முன்வைத்து உள்ளத்தின் பிரிவுகள் தொடர்பில் ஆராய்ந்த முக்கியமான அறிஞர்
1) ஜோவரான் கல்துங்
2) சாள்ஸ் கூலி
3)கலாநிதி பியசோம மேதிஸ்
4) தோமஸ் கூன்
5) சிக்மன் பிராய்ட்

36. இலங்கையில் பதினாறாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை அந்நியர் ஆட்சி நிலவியது. இச்செயற்பாடு பண்பாட்டியல் அம்சங்களில்
1) பண்பாட்டு பரிமாற்றம் ஆகும்.
2) பண்பாட்ட அதிர்வு ஆகும்.
3) பண்பாட்டு தேக்கம் ஆகும்.
4) பண்பாட்டு விரிவு ஆகும்.
5) பண்பாட்டு ஆக்கிரமிப்பு ஆகும்.

37. அமல் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றதால் தனது நாளாந்த வாழ்வுப் போக்கிலிருந்து விலகிச் செல்ல நேர்ந்தது. இதனால் பல உளமாற்றங்களினை எதிர்கொண்டார் இச்செயற்பாடு புலப்படுத்துவது
1) பதகளிப்பின் (Tension) குறியீடு
2) மன அழுத்தத்தின் (Stress) குறியீடு
3) மனக் கவலையின் (anxiety) குறியீடு
4) மனச் சோர்வின் (depression) குறியீடு
5) துருவமயமாதலின் (Polarization) குறியீடு

38. அபிவிருத்தியில் பொதுமக்கள் தொடர்பிலான நான்கு அம்சங்களை சீனக்குடியரசின் முன்னாள் தலைவரான மாவோ சேதுங் அறிமுகப்படுத்தினார் சரியாக அந்த அம்சங்களினை கொண்டிருக்கும் தெரிவை தெரிவு செய்க.
1) அறியும் ஆற்றல், சமூகத்தின் பங்களிப்பு, நகரமயமாக்கம், எண்ணளவாக்கம்
2) தொகுப்பாக்கம், தொழிற்துறையாக்கம், நம்பகத்தன்மை, நடைமுறையாக்கம்.
3) எண்ணளவாக்கம், நகரமயமாக்கம், தொழிற்துறையாக்கம், நவீனமயமாக்கம்.
4) அறியும் ஆற்றல், தொகுப்பாக்கம், எண்ணளவாக்கம், நடைமுறையாக்கம்.
5) தொழிற்துறையாக்கம், நகரமயமாக்கம், நவீனமயமாக்கம், மேற்கத்தைய மயமாக்கம்.

39. ஊடகங்கள் தனியார் மையமாக தொழிற்படினும் அதனை அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எனும் கருத்தியலோடு நேரடியாக தொடர்புபடும் எண்ணக்கரு
1) ஆட்சி அதிகாரவாத எண்ணக்கரு
2) சுதந்திரவாத எண்ணக்கரு
3) சமூகப் பெறுப்புடமை எண்ணக்கரு
4) தாராண்மை வாத எண்ணக்கரு
5) சோவியத் கம்யூனிஸ் எண்ணக்கரு

40. வீட்டின் உள்ளக கலாசார செயலொழுங்கில் அதிகளவு தாக்கத்தினை செலுத்தும் அதேவேளை இலங்கையில் ஜனரஞ்சகப் பண்பாட்டியலை பரவலடையச் செய்யக்கூடிய ஊடக வழிமுறை
1) பத்திரிகை
2) வானொலி
3) தொலைக்காட்சி
4) இணையம்
5) செல்லிடத் தொலைபேசி

41. தனிநபர் தேவைகளினை நிறைவு செய்தல் தனிநபர் அங்கம் வகிக்கும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நடத்தைக் கோலங்கள் ஆகியன தொடர்புபடும் பணி
1) சுய எண்ணக்கரு
2) ஆழ்பரிவு
3) தன்வயப்படுத்தல்.
4) ஒத்துணர்வு
5) சமூகமயமாக்கல்

42. பிரதான ஒலிபரப்பு சேவைக்குப் புறம்பாக பிரதேச ஒலிபரப்பு சேவைகளும் ஆரம்பிக்கப் பட்டன. கீழ்வருவனவற்றில் முதலாவது பிரதேச வானொலிச் சேவையாக அறிமுகப்படுத்தப் பட்ட சேவை
1) ரஜரட்ட சேவை
2) ருஹுபுனு சேவை
3) கிராந்துரு கோட்டை
4) கண்டி சேவை
5) மகாவலி சேவை

43. மொழிப் பண்பாட்டில் உள்ளடங்காதது
1) கொண்டாட்ட நிகழ்வுகளுடன் தொடர்புடைய செயற்பாடு
2) மெய்யியல் அடிப்படையிலான படைப்புகளும் ஒப்பித்தல்களும் உருவாகுதல்.
3) மனிதனுடன் தொடர்புடைய வெளிவாரியான இயற்கைப் பொருட்கள்
4) மனிதனின் சமூகப் பழக்கவழக்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள்
5) தனக்குத் தானே பேசிக்கொள்வதுடன் தொடர்புடைய தொடர்பாடல் செயற்பாடுகள்.

agaram.lk

44. வெகுசன ஊடகங்களினால் முன்வைக்கப்படும் செய்திகள் கருத்துருவாக்கத் தலைவர்களினால் மத்தியஸ்தப்படுத்தப்படுவது பற்றிய சிந்தனை
1) வாயிற் காப்பாளர் எண்ணக்கரு
2) இருபடிநிலை எண்ணக்கரு
3) சமூகப் பொறுப்புடமை கோட்பாடு
4) கல்துங்கின் முரண்பங்கு கோட்பாடு
5) மாஸ்லோவின் தேவைக் கோட்பாடு

45. அபிவிருத்தி தொடர்பாடல் செயற்றிட்ட அறிக்கையானது எதிர்காலத் திட்டங்களிற்கு முக்கியமானது. ஏனெனில்
1) இலக்குகள் மற்றும் குறிக்கோள் விபரங்களை உள்ளடக்கியிருத்தல்.
2) அனுசரணை வழங்குபவரின் விபரங்களைக் குறிப்பிட்டு இருத்தல்.
3) தோன்றிய பிரச்சினைகள் குறைபாடுகளை உள்ளடக்கியிருத்தல்.
4) செயற்றிட்டக் குழு பற்றிய விபரத்தை வழங்குதல்.
5) வேறுபட்ட பார்வைகளுக்கு சந்தர்ப்பமளிக்காதிருத்தல்.

46. குறித்தவொரு நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தினையும் நிலைநிறுத்தும் முகமாக சமூக ஊடகங்கள் தணிக்கை செய்யப்படுவது அந்த ஊடகங்களில் செய்தியானது
1) பெறுநர்கள் மத்தியில் வேமாகப் பரவலடைவதன் காரணத்தினால்
2) உயரிய நம்பிக்கையை பெற்றிருத்தல்.
3) பகுப்பாய்வுடனான தகவ்கள் முன்வைக்கப்படுவதன் காரணத்தினால்.
4) படங்கள் மற்றும் ஒலி ஆகிய சேர்க்கைகள் குறைவாக பயன்படுத்துவதன் காரணத்தினால்.
5) தகவல்களை அதிகாரம்மிக்க மூலங்களின் அடிப்படையில் மாத்திரம் முன்வைக்கப்படுவதனால் ஆகும்.

47. தற்போது நடைமுறையில் இருக்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச்சட்டம் பயன்படுத்தக் கூடியதாக இருப்பது
   1) ஊடகவியலாளர் மாத்திரம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
   2) அரச மற்றும் தனியார் துறைகளில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
   3) அரச துறையில் இருந்து எந்தத் தகவலையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ளுதல்.
   4) பத்து வருடங்களுக்கு முன்னர் பரிமாறப்பட்ட அரசு தொடர்புடைய ஆவணங்களை பரிசீலித்தலிற்காகும்.
   5) அரசினதும் அது தொடர்புடைய நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பற்றிய தகவல்களினைப் பெற்றுக் கொள்வதற்காகும்.

48. கொந்நிலை, நடத்தைக்கோலம் ஆகியன ஒன்றிணைவதால் உருவாகும் மொழியின் இயல்புகளினைக் குறிப்பது
   1) பேச்சு 2) உரை 3) விபரணம்
   4) பிரதியாக்கம் 5) ஆற்றுகை

49. ஒரு பாடசாலையில் ஊடக கழகம் பாடசாலையை அழகுபடுத்துதல் வேலைத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்தது. அதன் செயலடைவை செயற்றிட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் ஆவணமொன்றின் ஊடக கண்காணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. செயற்றிட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பு ஆவணத்தில் உள்ளடக்கப்படவேண்டிய முக்கிய விடயங்களினைக் குறிப்பது.
   1) இலக்குகள், வரவு – செலவுத்திட்டம். நிறுவனக் கட்டமைப்பு, வரையறைகள்.
   2) தொடர்புடைய செயற்பாடுகள், காலச்சட்டகம், நியதிகள், பொறுப்புக்கள்.
   3) நிதி வளங்கள், பௌதிக வளங்கள், மனித வளங்கள், மதிப்பீட்டுச் செயன்முறைகள்.
   4) வரவுசெலவுத்திட்டம், உத்திகள், பணிவிதி முறைகள், எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்
   5) இலக்குகள், உத்திகள், வளங்கள், காலச்சட்டகம் முதலியன.

50. அபிவிருத்தித் தொடர்பாடல் வழிமுறைகள் பற்றித் தீர்மானிக்கையில் கவனத்தில் கொள்வதற்காகப் பிரேரிக்கப்பட்டுள்ள சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A – அவை புதிய தொழினுட்ப அபிவிருத்தியுடன் இணைத்து நடைமுறைப்படுத்தக் கூடியன
   B - உரிய விடயம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்டோரினால் திட்டங்கள் தயாரிக்கப்படுவது அவசியமாகும்.
   C - அவற்றைப் பாரம்பரிய வழிமுறைகளுடன் இணைத்து பிரயோகிப்பது தொடர்பிலான ஆற்றல்களினைக் கண்டறிவது சிறப்பானது
   D - அவை இலக்கு வைக்கப்பட்ட சமூகத்திற்கு மாத்திரமான திட்டமிடப்பட்ட தொடர்பாடல் வழிமுறைகளாக அமைவது அவசியமானது.
   E - பயன்தரக் கூடியவாறு மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை ஆய்ந்தறிந்து தெரிவு செய்வது கட்டாயமானது.

   இவற்றுள் உண்மையான கூற்றுக்கள்
   1) A, B, C, D ஆகியன மாத்திரம்
   2) A, B, D, E ஆகியன மாத்திரம்
   3) A, C, D, E ஆகியன மாத்திரம்
   4) A, C, D, E ஆகியன மாத்திரம்
   5) A, B, C, D, E ஆகியன மாத்திரம்

## பகுதி C

26. இலங்கையில் தகவல் அறியம் உரிமையும் அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தம்
   1) பதின்மூன்றாவது சீர்திருத்தம் 2) எட்டாவது சீர்திருத்தம்
   3) பத்தொன்பதாவது சீர்திருத்தம் 4) இருபதாவது சீர்திருத்தம்
   5) பதினைந்தாவது சீர்திருத்தம்

agaram.lk

27. இலங்கை அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டமையினால் மதம்சார் பத்திரிகைகள் ஆரம்பத்திலிருந்து உதயமாகின. அந்தவகையில் பின்வரும் தொகுதியை ஒழுங்கு முறைப்படுத்தி குறிப்பது

| **மதம்** | **பத்திரிகை** |
|---|---|
| பௌத்தம் | A முஸ்லிம் நேசன் |
| இந்து | B பாதுகாவலன் |
| கிறிஸ்தவம் | C லங்காலோகய |
| கத்தோலிக்கம் | D உதயதாரகை |
| இஸ்லாம் | E இந்து சாதனம் |

1) C, D, E, B, A  2) C, B, D., E, A  3) A, B, C, D, E
4) C, E, D, B, A  5) A, E, D, B, C

28. பின்வரும் கருத்தியல்களில் பூகோளமயமாதலுடன் தொடர்பினை வெளிப்படுத்தாத கூற்று
1) தொழினுட்ப வளர்ச்சியின் பரவல்
2) தேசிய எண்ணக்கரு வலுவடைதல்
3) சமூகங்களிடையே போட்டித்தன்மை உருவாதல் .
4) பல்லின வியாபாரம் முன்வருதல்
5) தனிப்பட்ட மூலதனத்தின் ஓட்டம் விருத்தியடைதல்.

29. இலங்கையின் ஊடக உள்ளடக்கப் போக்கும் ஏனைய நாடுகளினைப் போன்றே மாற்றமடைந்து வருகின்றது. இவற்றோடு தொடர்புபடாத கூற்று
1) எளிமையான மொழிப்பாவனை
2) வர்த்தக விளம்பரங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல்.
3) புதிய முன்வைப்பு பாணிகள் பயன்படுத்தப்படல்.
4) பொழுதுபோக்கிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படல்.
5) செய்தி அறிவிப்பிற்கு அதிக முக்கியம் வழங்கப்படல்.

30. மக்களது படைப்பாக்கங்கள் மற்றும் அவை உருவாக்கப்பட்ட விதம் பற்றிச் சமூக விஞ்ஞான மனப்பாங்கின் மூலம் ஆராயும் போது பயன்படுத்தும் போதியளவு தரவுகளைச் சேகரிக்கும் முறையாகும் என ஆய்வினை வரையறை செய்தவர்
1) ஹர்மன்.என்.மோர்ஸ்  2) மலலசேகர அகராதி  3) சபா.ஜெயராசா
4) டானியல் லேணர்  5) மார்க்.ஏப்ரஹாம்.

agaram.lk

31. ஆரம்பப் பிரிவில் இருந்து வளர்ந்தோர் வரை கற்கை நெறிகளில் தொடர்பாடல் ஊடகக் கற்கையும் போதிக்கப்பட வேண்டும் எனும் கருத்தியலை முன்வைப்பது
1) ஐரோப்பிய ஆணைக்குழு  2) பிலிப்பைன்ஸ் அரச பல்கலைக்கழகம்
3) தேசிய கல்வி ஆணைக்குழு  4) உலக வங்கி
5) யுனஸ்கோ

32. தொடர்பாடல் ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் போது நீர் தரவு சேகரிப்பதற்கு உரிய கருவிகள் / உபகரணங்களை பயன்படுத்துவதற்கு தயாராகுவீர். அவ்வாறாக தரவு சேகரிப்பதற்கு நீர் பயன்படுத்த முடியாத அம்சம் பின்வருவனவற்றுள் எது?
1) பரிசோதனை  2) வினாக்கொத்து  3) அவதானம்
4) பேட்டி முறை  5) நேர்முகக் கலந்துரையாடல்.

33. வகுப்பறையொன்றில் உள்ள 62 மாணவர்களிடம் தொலைக்காட்சியை பார்வையிடும் நேரம் தொடர்பில் சிறிய கருத்துக் கணிப்பு பெறப்பட்டது. அவர்கள் குறிப்பிட்ட மணித்தியால அளவுகள் வருமாறு

| **மணித்தியாலம்** | **மாணவர்கள்** |
|---|---|
| 1 – 2 | 25 |
| 2 – 3 | 15 |
| 3 – 4 | 10 |
| 4 – 5 | 07 |
| 5 – 6 | 05 |

இத்தரவினை அடிப்படையாகக் கொண்டு ஆகாரமாகக் கருதப்படக் கூடியது
1) 15  2) 05  3) 07  4) 10  5) 25

34. A- இலங்கைப் பத்திரிகை நிறுவனத்திற்கு இணைந்ததாக உருவாக்கப்பட்டது.

B - இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், பத்திரிகை வெளியிட்டாளர் சங்கம் ஆகியன இணைந்து உருவாக்கப்பட்டது.

C - பத்திரிகை ஒழுக்க நெறி மீறல் தொடர்பான விசாரணை முன்னெடுப்பு மேற்கொள்ளல்.

முதலிய செயற்பாடுகளோடு தொடர்புடைய ஊடகத் தணிக்கை நிறுவனம்

1) இலங்கைப் பத்திரிகை பேரவை
2) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
3) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம்
4) இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழு
5) பொது அளிக்கை கட்டுப்பாட்டு சபை.

35. 1934 அமெரிக்காவில் நிறுவப்பட்ட சமஸ்டி தொடர்பாடல் ஆணைக்குழுவின் முதன்மையான நோக்கமாவது

1) வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தை பிரசித்தப்படுத்தல்.
2) வானொலி மற்றும் தொலைக்காட்சி வணிக நோக்கங்களினை செயலூக்கப்படுத்துதல்.
3) வெகுசன ஊடக நிறுவனம் இடையேயான போட்டியை இழிவளவாக்குதல்.
4) அபிவிருத்தி நோக்கங்களுக்காக மக்களை செயலூக்கப்படுத்துதல்.
5) வெகுசன ஊடக நிறுவனங்களிற்கிடையேயான தொழில்நுட்பச் சிக்கல்களை ஒழுங்கு முறைப்படுத்துதல்.

36. வெகுசன ஊடக செய்தி பெறுநர்களினை நோக்கி கடத்தப்படும் போது குறித்த செய்தி மீது ஆதிக்கம் செலுத்தும் செயற்பாட்டினைப் புலப்படுத்துவது

1) குறிமுறையாக்கம் 2) குறிமுறையவிழ்ப்பு 3) பொருட்கோடல்
4) தகவல் விளக்கம் 5) வாயிற் காப்பாளர்

37. அபிவிருத்தி எனும் எண்ணக்கருவின் இயல்புகள் குறித்து ஒரு தொகுதி மாணவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு

ராஜ் - 1990 களில் சர்வதேச அபிவிருத்தி சிந்தனையில் அவதானத்தைப் பெற்றது.
சாருஜன்- அடிப்படைச் சமூக சேவைகளுக்கான வாய்ப்பு வழங்குதல்.
பானுஜன்- பாதிக்கப்படும் பெண்களுக்குத் தீர்வினைப் பெறுதல்.
திலக்சன்- நிலையான சீவனோபாயம், தொழில் வாய்ப்பு. வினைத்திறனான வளங்களுக்கான பிரவேசங்களை அதிகரித்தல்.

மேற்குறித்த விடயங்களுடன் தொடர்புபடும் எண்ணக்கரு

1) உள்ளூர் மயமாக்கல்
2) வறுமையை ஒழித்தல்.
2) மக்கள் மையம்
4) சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தை கட்டியெழுப்புதல்.
5) கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்குபற்றுதல்.

38. அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கரு பற்றிய புதியதோர் அணுகுமுறையாக "புத்தாக்கப் பரவலாக்கம்" எனும் கோட்பாட்டாக்கத்தினை முன்வைத்தவர்.

1) ஆர்.மெல்கோட்டே 2) எட்கர் ஒவ்வன்ஸ் 3) மகாத்மா காந்தி
4) எவரட்.எம்.ரொஜர்ஸ் 5) டட்லி சியர்ஸ்

39. சந்தைப்படுத்தல் துறைப் பேராசிரியர் பிலிப் கொட்லர் (Philip Kotler) நிகழ்வு முகாமைத்துவத்தில் முன்வைக்கப்பட்ட நிகழ்வு வகைப்படுத்தலுக்குள் அடங்காத விடயமாக அமைவது

1) சர்வதேச நிகழ்வுகள் 2) ஆன்மீக நிகழ்வுகள்
3) சமூக மற்றும் வாழ்வியல் நிகழ்வுகள் 4) அரசியல் நிகழ்வுகள்
5) ஒன்றிணைந்த சமூக நிகழ்வுகள்

agaram.lk

40. தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் தமது கருத்துக்களும் கொள்கை விளக்கங்களும் மக்களைச் சென்றடைவதற்காக ஊடகங்களில் வெளியிட்டுக் கொள்ளும் நோக்குடன் ஒழுங்குபடுத்தும் பொதுசனத் தொடர்பு முறை

1) வீடியோ செய்தி வெளியீடு
2) பத்திரிகைவெளியீடு / ஊடக வெளியீடு
3) ஊடகவியலாளர் மாநாடு
4) ஊடக குறு வெளியீடு
5) புகைப்பட அறிவிப்பு

41. பொதுசனத் தொடர்பு என்பது நல்லெண்ணத்துடன் பாய்ந்து வரும் தெளிவான கருத்தப் பிரவாகம் ஆகும் எனும் கருத்தியலை முன்வைத்து விளக்கமளிப்பவர்

1) எட்வர்ட்.எல். பெர்னிஸ்
2) பிலிப்.கொட்லர்
3) சாம் பிளக்
4) ஆர்.டொமினிக்
5) சார்ள்ஸ் பிளேகார்ட்

42. உலகின் முதலாவது பொது மக்கள் தொடர்பு உருவாக்கத்தினை ஆரம்பித்துக் கொண்டவர்

1) ஐவி லீ
2) எட்வர்ட்.எல்.பெர்ணிஸ்
3) ஜோசப்.ஆர்.டொமினிக்
4) சாம் பிளக்
5) சார்ள்ஸ் பிளேகார்ட்

43. நாட்டாரியல் என்பது அடிப்படை அல்லது சிக்கலான நிலைமைக்குட்பட்ட நவீன அல்லது மக்கள் சமூகத்திற்கிடையில் நீண்டகாலமாக வாய்மொழி வாயிலாக விருத்தியடைந்த ஒரு வளம்மிக்க செல்வமாகும் எனும் கருத்தியிலை முன்வைப்பவர்

1) ஆனந்த குமாரசுவாமி
2) ஸ்ரீ லியனகே
3) நந்தசேன ரத்னபால
4) கா.சிவத்தம்பி
5) க.கைலாசபதி

44. தரப்பட்டுள்ள படம் குறிக்கும் கமராக் கோணம்



1) அண்மைநிலை எடுப்பு
2) மிகு அண்மை வீச்செடுப்பு
3) மிகு அண்மைநிலை எடுப்பு
4) இடைநிலை எடுப்பு
5) இடைநிலை அண்மைக்காட்சி

agaram.lk

45. பின்வரும் கருத்தியல்களில் வானொலி ஊடகத்துடன் தொடல்பல்லாத கூற்று

1) எளிமையான மொழிநடை பயன்படும் ஊடகம்
2) கற்பனை மிகுந்து வரும் தன்மை உடையது
3) விபரண ரீதியிலான மொழிநடை பயன்படுத்தப்படும்.
4) பேசுதல், கேட்டல், சமநேரத்தில் நிகழும்.
5) வன்முறை இழிவளவாக்கப்படும் ஊடகம்

46. இலங்கையில் சர்வதேச நோய் பரவல் காரணமாக நடமாட முடியாத சூழல் உருவானது. இதனால் மாணவர்கள் கற்றல் சார் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு (Zoom) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இச்செயற்பாடடினைக் குறிக்கும் தொடர்பாடல் வகை

1) மெய்நிகர் தொடர்பாடல்
2) புதிய ஊடகத் தொடர்பாடல்
3) சமூக ஊடகத் தொடர்பாடல்
4) பொதுசனத் தொடர்பாடல்
5) இணையத் தொடர்பாடல்

47. தொலைக்காட்சி விளம்பரம் மீதான கலந்துரையாடல் ஒன்று பாடசாலை ஊடக வட்டத்தில் நடைபெற்றது.

A- நுகர்வோர் எவ்வாறு பொருட்களை நுகர்கின்றனர் என்பதை விளம்பரங்கள் மாற்றத்திற்குள்ளாக்க முடியும்.

B- விளம்பரங்கள் வெகுசன ஊடகம் உயிர்வாழ அவசியம்

C- நம்பிக்கைத் தன்மையுடன் பொருட்களை கொள்வனவு செய்ய விளம்பரங்கள் அவசியம்

D- விளம்பரங்களினைச் சரியாகப் புரிந்துகொள்ள பெறுநர் ஊடக விளங்கறிவை கொண்டிருக்க வேண்டும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் இருந்து விளம்பரம் பற்றிய சரியான கருத்தினை முன்வைப்பவர்கள்.

1) A மற்றும் B  2) A, B மற்றும் C  3) B,C மற்றும் D

4) A, C மற்றும் D  4) A, B,C, D அனைவரும்.

48. வெகுசன ஊடகப் பெறுநர்கள் ஐவரது ஊடகப் பாவனை பற்றிய தகவல் கீழே காணப்படுகின்றது.

A- செய்திப் பத்திரிகைகள் மீதான பார்வையை முன்வைக்கும் காலைநேரத் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு நகரத்திற்குச் சென்று பத்திரிகை வாங்குவார்.

B- கைத்தொலைபேசியில் காலைநேர வானொலி செய்தி அறிக்கையைச் செவிமடுத்துவிட்டு பெற்றுக்கொண்ட குறுந்தகவல்களை (News Alerts) வாசிப்பார்.

C- அலுவலகத்திற்குச் செல்லும் போது திறன் தொலைபேசி (Smart Phone) மூலம் செய்தி இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்குள் பிரவேசிப்பார்.

D- இரவு உறங்குவதற்கு முன்னர் தொலைக்காட்சிச் செய்தி மற்றும் வானொலிச் செய்திகளை இணையதளங்களில் ஆராய்ந்து, செய்திப் பத்திரிகை இணையத் தளங்களை சமூக ஊடகங்கள் மூலம் வாசிப்பார்.

E- You Tube மூலம் திரைப்படம் ஒன்றைப் பார்த்து முகநூல் (Face Book) மூலம் செய்தி Post களை வாசிப்பார்.

மேற்காணும் பெறுநர்களில் ஊடகக் குவிகையுடன் மிகவும் நெருக்கமுடைய பெறுநர் குழுவில் இடம்பெறுவோர்.

1) A, B, C மற்றும் E ஆகியோர்  2) A, C,D மற்றும் E ஆகியோர்

3) B, C ,D மற்றும் E ஆகியோர்  4) B, D மற்றும் E ஆகியோர்

5) C, D மற்றும் E ஆகியோர்

49. ஆய்வு ஒழுக்கநெறிகள் பற்றிய இரண்டு கூற்றுக்கள் கீழே காணப்படுகின்றன.

A- தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஆய்வாளரின் அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தாமை

B- விரும்பிய நேரத்தில் தரவு வழங்குநர் ஆய்வுச் செயன்முறையினின்று விலக அனுமதி அளித்தல்.

இக்கூற்றுக்களில்

1) A உண்மையாவதோடு B பொய்யாகும்.

2) A பொய்யாவதோடு B உண்மையாகும்.

3) A மற்றும் B ஆகிய இரு கூற்றுக்களும் பொய்யானவையாகும்.

4) A மற்றும் B ஆகியன உண்மையாவதோடு A மூலம் B உறுதிப்படுத்தப்படுகிறது.

5) A மற்றும் B ஆகியன உண்மையாவதோடு B மூலம் A உறுதிப்படுத்தப்படுகிறது

agaram.lk

50. பாடசாலை ஊடக அலகினால் பிரசுரிக்கப்படும் வார சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் சில கீழ்வருமாறு

A- விமர்சனரீதியான ஊடக நுகர்வு
ஊடக ஒழுக்கநெறிகள் பற்றிய அறிவு

B- ஊடகக் கொள்கைகள் குழு ஒன்றை நியமித்தல்.
ஊடக வரையறை

C- தகவல் பெற்றுக்கொள்ளுதல் பற்றிய அறிவு
சிறந்த பிரஜையாக அபிவிருத்திக்கு துணைபுரிதல்

D- சந்தர்ப்பத்திற்கு உகந்த மொழிப்பாவனை
படைப்பாக்க ரீதியான திறன் விருத்தி

மேற்காணும் விடயங்களில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் பாடத்தைக் கற்பதன் தேவை பற்றிய இழிவளவான முக்கியத்துவத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

1) A, C மட்டும்.  2) B, D மட்டும்  3) C, D மட்டும்

4) A மட்டும்  5) B மட்டும்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
6th Term Examination, - 2020

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் - II<br>Communication & Media Studies - II | Three Hours<br>Gr. 13 (2020) | 29 | T | II |

**வினாத்தாள் கட்டமைப்பு**

**வினாத்தாள் II நேரம் 03 மணித்தியாலயங்கள் (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)**

இவ் வினாத்தாள் A,B என்ற இரண்டு (02) பகுதிகளைக் கொண்டது.

- பகுதி A இலிருந்து இரண்டு (02) வினாக்களையும் பகுதி B இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுதல் வேண்டும்.

பகுதி A - இந்தப் பகுதி மூன்று (03) கட்டமைப்பு கட்டுரை வகை வினாக்களைக் கொண்டது. அவை 2008 **(பழைய)** மற்றும் 2018 **(புதிய)** பாடத்திட்டங்கள் இரண்டுக்கும் பொதுவான பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும்.

agaram.lk

பகுதி B - இந்தப் பகுதி எட்டு (08) கட்டமைப்பு கட்டுரை வகை வினாக்களைக் கொண்டது. அதில் 4, 5, 6, 7 ஆகிய வினாக்கள் **பழைய** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும் 8, 9, 10, 11 ஆகிய வினாக்கள் **புதிய** பாடத்திடத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும்.

வினாத்தாள் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 05 x 40 = 200

இறுதிப் புள்ளியைக் கணித்தல் :

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | | = 50 |
| வினாத்தாள் II | = 200 ÷ 4 | = 50 |
| இறுதிப்புள்ளி | | = 100 |

**வினாப்பத்திரம் II**

**பகுதி A**

- ***2008 (பழைய) மற்றும் 2018 (புதிய பாடத்திட்டங்கள் இரண்டுக்கும் பொதுவான பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளிலிருந்து இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.***

01. 1) வாய்மொழித் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்குக் கவனிக்க வேண்டிய விடயங்கள் **நான்கைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
    2) ஆளிடைத் தொடர்பாடலின் பயன்கள் **நான்கைப்** பெயரிட்டு அவற்றுள் **ஒன்றைப்** பற்றிச் சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)
    3) அரிஸ்ரோட்டிலின் தொடர்பாடல் மாதிரிக்கும் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம் மாதிரிக்குமிடையேயான **மூன்று** வேறுபாடுகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)
    4) வெகுசன ஊடகங்கள் தணிக்கைச் செயற்பாட்டிற்கு உள்ளாகின்றன. அதனடிப்படையில் ஊடகங்களில் தணிக்கைப் பிரயோகப்படுத்தப்படும் **நான்கு** அம்சங்களினைக் குறிப்பிட்டு விளக்குக. (16 புள்ளிகள்)

02. 1) அ) தொடர்பாடல் பற்றி வில்பர் ஷ்ராமினால் முன்வைக்கப்பட்ட விளக்கத்தினைத் தருக.
    ஆ. சமூகமயமாக்கம் என்பதில் இருந்து நீர் விளங்குவது யாது? (4 புள்ளிகள்)
    2) வெகுசன ஊடக தணிக்கை முறைகளில் சுயதணிக்கையும் ஒன்றாகும். ஊடக நிறுவனம் சுயதணிக்கைகளினை வாயிற்காப்பாளர் மூலம் நிறைவேற்றுகின்றன. வாயிற் காப்பாளரின் பணிபங்கினை எடுத்துரைகுக. (8 புள்ளிகள்)
    3) ஊடகப் பண்பாடு என்பதனை வரையறுத்து அதன் இயல்புகள் தொடர்பில் ஆராய்க. (12 புள்ளிகள்)
    4) ஊடக விமர்சனம் (திறனாய்வு) என்பது படைப்பாளி, பெறுநர் ஆகிய இரு சாராருக்கும் நன்மை பயக்கக்கூடியது. ஊடக விமர்சனம் தொடர்பில் படைப்பாளிக்கு முக்கியத்துவமானதாய் அமையும் **இரண்டு** விடயங்களினையும் பெறுநருக்கு முக்கியத்துவமானதாய் அமையும் **இரண்டு** விடயங்களினை வெவ்வேறாக விளக்குக. (16 புள்ளிகள்)

03. "தொடர்பாடல் வினைத்திறனாகப் பயன்படுத்த படைப்பாக்கத் தொடர்பாடலும் முக்கியமானதாகும்."
    1) படைப்பாக்கத் தொடர்பாடலின் மூலமாக நாட்டாரியல் வழிமுறைகள் காணப்படு கின்றன. நாட்டார் ஊடக முறைகள் **நான்கு** தருக. (4 புள்ளிகள்)
    2) ஊடக விளங்கறிவு என்பதனை வரையறுத்து வெகுசன ஊடகங்கள் வீட்டின் உள்ளக கலாசாரம் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் கருத்துரைக்குக. (8 புள்ளிகள்)
    3) சினிமா ஊடகம் ஒன்று தொலைக்காட்சி ஊடகத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை **நான்கு** விடயங்களின் ஊடாக விபரிக்குக. (12 புள்ளிகள்)
    4) "இலங்கையில் கொவிட் - 19 கொரோணா நோய் பரவலும் சமூக ஊடகங்களின் பாவனையும்" எனும் தலைப்பில் கீழ்க்காணும் கருப்பொருட்கள் உள்ளடங்கும் வகையில் பத்திரிகை ஒன்றிற்கு 300 சொற்களுக்குக் குறையாத ஆக்கம் ஒன்று எழுதுக.
        - சமூக ஊடகங்கள்
        - அதன் சாதகமான நிலைமைகள்
        - பாதகமான தன்மைகள்
        - ஊடக விளங்கறிவில் சமூக ஊடகத் தாக்கம். (16 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி B

- **இப்பகுதியில் 4,.5,6,7 ஆகிய வினாக்கள் 2008 (பழைய) பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளதோடு 8,9,10,11 ஆகிய வினாக்கள் 2018 (புதிய) பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியிலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களை தெரிவு செய்து விடையளிக்குக.**

04. 1) விளம்பரப்படுத்தல் மூலமாகப் பண்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
2) வெகுசன ஊடகங்கள் வாயிலாகக் கற்றல் செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. கற்றல் கருவியாக வெகுசன ஊடகம் தொழிற்படும் விதங்கள் **இரண்டினையும்** குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளிகள்)
3) புதிய ஊடகப் பயன்பாட்டில் காணக்கிடைக்கின்ற மொழி ரீதியான போக்குகள் **நான்கினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளிகள்)
4) வெகுசன ஊடகங்களில் மொழிப் பயன்பாட்டுக்கான வரையறைகள் காணக்கிடைக்கின்றன. செய்திப் பத்திரிகை, வானொலி ஆகிய ஊடகங்கள் ஒவ்வொன்றிலும் தாக்கம் செலுத்துகின்ற அத்தகைய வரையறைகள் தலா **மூன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக. (16 புள்ளிகள்)

05. 1) வாய்மொழியல்லாத தொடர்பாடலின் பண்புகள் **நான்கினை** விவரிக்குக.
2) வெகுசன ஊடகச் செய்திகளைப் பகுப்பாய்வு செய்யும் போது கவனத்திற் கொள்ளப்படும் படைப்பாக்கபூர்வமான வாசிப்புடன் தொடர்புடைய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (12 புள்ளிகள்)
3) படைப்பாக்க அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றின் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப் படும் **நான்கு** விடயங்களினை உதாரணங்களுடன் விபரிக்குக. (12 புள்ளி)
4) அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்து வேறுபட்ட கருத்துரைத்த **நான்கு** மேற்கத்தைய நிபுணர்களினைப் பெயரிட்டு அவர்களில் **இருவர்** அபிவிருத்தித் தொடர்பாடல் பற்றி முன்வைத்த **இரண்டு** விடயங்கள் வீதம் தனித்தனியே விபரிக்குக. (16 புள்ளிகள்)

agaram.lk

06. 1) ஊடக மாநாடு ஒன்றினை ஒழுங்குபடுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
2) பூகோளமய ஊடகத்தில் பண்பாட்டுச் சுற்றோட்டத்தின் சமநிலையற்ற தன்மை காணப்படுவதற்கான விடயங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)
3) பொதுமக்கள் தொடர்பு நடவடிக்கைகளில் புகைப்படவியலைப் பயன்படுத்தக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **இரண்டினை** விளக்குக. (12 புள்ளிகள்)
4) பூகோள மயமாதலினால் ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகளின் **நான்கை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

07. 1) சுயஎண்ணக்கருவினை வரையறை செய்க. (4 புள்ளிகள்)
2) செவிமடுத்தல் செயலொழுங்கின் **நான்கு** கட்டங்களினையும் குறிப்பிட்டு கேட்டல் தேர்ச்சியை விருத்தியாக்கும் படிமுறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (8 புள்ளிகள்)
3) தனியாள் ஒருவருக்கு உளரீதியான அழுத்தங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றிலிருந்து மீளுவதற்கான வழிமுறைகள் **நான்கினையும்** குறிப்பிட்டு விளக்குக. (12 புள்ளிகள்)
4) ஊடக வன்முறை என்பதில் இருந்து நீர் விளங்குவது யாது என வரையறைத்து வெகுசன ஊடக வன்முறை சித்திரிப்பு தொடர்பில் விமர்சன ரீதியாக ஆராய்க. (16 புள்ளிகள்)

08\. 1) தொடர்பாடல் கற்கையானது ஓர் துறைசார் பாடமாக வளர்ச்சி பெறுவதற்கு அடித்தளமிட்ட **மூவரையும்** குறிப்பிட்டு அவர்களின் முன்வைக்கப்பட்ட எண்ணக்கருக்களைத் தருக. (4 புள்ளிகள்)

2) தொடர்பாடல் செயன்முறையானது பல்வேறு நோக்கங்களினை அடிப்படையாகக் கொண்டது. அந்தவகையில் **நான்கு** நோக்கங்களினைக் குறிப்பிட்டு சிறுவிளக்கம் தருக. (8 புள்ளிகள்)

3) பிரசித்தமான பண்பாட்டில் காணப்படும் அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக. (12 புள்ளிகள்)

4) வெகுசனத்தொடர்பாடல் செயற்பாட்டில் முக்கியம் பெறும் ஹப் (HUB) மாதிரியைக் குறிப்பிட்டு அதன் **நான்கு** அம்சங்கள் தொடர்பில் விளக்குக. (16 புள்ளிகள்)

09\. தொடர்பாடல் கற்கையில் புலமைசார் ஆய்வும் முக்கியமானது.

1) ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் போது பின்பற்றப்படும் ஆய்வுப் படிமுறைகளினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

2) தொடர்பாடல் துறையில் ஆய்வின் முக்கியத்துவம் மற்றும் அனுகூலங்கள் பற்றி உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக. (8 புள்ளிகள்)

3) நீர் விரும்பிய ஊடகப் போக்கு எண்ணக்கருவொன்றை இலங்கை ஊடகங்களினை அடிப்படையாக கொண்டு விளக்குக. (12 புள்ளிகள்)

4) பெறுநர்களினை மையப்படுத்தி ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள போக்குகள் விழிப்புணர்வு மிக்க அல்லது விமர்சனமிக்க பெறுநர்களைப் பாதிக்குமாற்றலினை உதாரணங்களுடன் விபரிக்குக. (16 புள்ளிகள்)

agaram.lk

10\. 1) ஊடகத் தணிக்கை என்றால் என்ன என்பதனைத் தெளிவுபடுத்தி அதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

2) ஊடகத் தணிக்கை நிறுவனங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றில் **இரண்டின்** பணிகள் தொடர்பில் விபரிக்குக. (8 புள்ளிகள்)

3) உங்களது பிரதேசத்தில் காணப்படும் அபிவிருத்திசார் பிரச்சினையொன்றினை இனம் காண்டு அதற்குப் பொருத்தமான அபிவிருத்தித் திட்டம் ஒன்றை முன்வைக்குக. (12 புள்ளிகள்)

4) எமது நாட்டின் அபிவிருத்தியில் அபிவிருத்திக்கான தொடர்பாடலின் அவசியம் பற்றி விளக்குக. (16 புள்ளிகள்)

11\. 1) மெய்நிகர் தொடர்பாடல் என்பதனை வரையறுத்து அதன் இயல்புகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

2) பொதுசனத் தொடர்பு அதிகாரி அல்லது ஊடக அதிகாரியின் பணி தொடர்பில் விபரிக்குக. (8 புள்ளிகள்)

3) பொது மக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்கள் **நான்கினை** இனங்கண்டு அவற்றில் **இரண்டு** தொடர்பில் விபரிக்குக. (12 புள்ளிகள்)

4) செய்திப் பத்திரிகை ஊடகங்களில் படைப்பாக்க ரீதியான மொழிப் பாவனை தொடர்பில் உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)